RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்- 233 ஆகஸ்டு.25 2025 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5



## ககன்யானுக்கான முதல் ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை வெற்றி: இஸ்ரோ

புதுடெல்லி: ஆக.25-

இஸ்ரோவின் முதல் விண்வெளி பயணமான ககன்யானில் செல்ல உள்ள விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக தரை யிறங்குவதை உறுதிப்படுத்தும் முதல் ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளி யிட்டுள்ள பதிவில், “ககன்யான் பயணத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை யிலான முழுமையான ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இஸ்ரோ, இந்திய விமானப்படை, டிஆர்டிஓ, இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் கீழ் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளிப் பயணத்தில் மேலே புறப்படுவது முதல் பத்திரமாக கீழே தரை யிறங்குவது வரை அனைத்துமே விண்வெளி வீரர்களுக்கு மிகவும் ஆபத்தானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கீழே இறங்கும்போது, உரிய நேரத்தில் பாராசூட் விரிவடைந்து விண்வெளி வீரர்களை அது பத்திரமாக தரையிறக்க வேண்டும். இதை உறுதிப்படுத்தும் நோக்கில் 5 டன் எடையுள்ள போலி குழுக்கள் மேலே அனுப்பப்பட்டு பிறகு பாராசூட் மூலம் பத்திரமாக கீழே இறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சி வெற்றி பெற்றிருப்பது, ககன்யான் திட்டத்தில் மிக முக்கிய மைல்கலாகப் பார்க்கப்படுகிறது.

இதனிடையே, ககன்யானில் பங்கேற்கவுள்ள குரூப் கேப்டன் சுபன்ஷு சுக்லா, குரூப் கேப்டன் பி.பி. நாயர், குரூப் கேப்டன் அஜித் கிருஷ்ணன், குரூப் கேப்டன் அங்கத் பிரதாப் ஆகியோரை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டி கவுரவித்தார். இந்த நிகழ்வில் பேசிய ராஜ்நாத் சிங், “நான்கு ககன்யான் விண்வெளி வீரர்களும் நாட்டின் ரத்தினங்கள், தேசிய லட்சியங்களின் முன்னோடிகள்.

இந்தியா விண்வெளியை ஆராய்ச்சிக்கான ஒரு துறையாக மட்டும் பார்க்கவில்லை. நாளைய பொருளாதாரம், பாதுகாப்பு, எரிசக்தி, ஒட்டுமொத்த மனிதகுலத்தின் எதிர்காலம் என அனைத்துமாக அதை இந்தியா பார்க்கிறது. பூமியின் மேற்பரப்பைத் தாண்டி விண்வெளியின் புதிய எல்லைகளுக்குள் நாம் சீராக முன்னேறி வருகிறோம்.

சந்திரனில் இருந்து செவ்வாய் வரை நமது இருப்பையும் ஆய்வுகளையும் நாம் ஏற்கெனவே விரிவுபடுத்தியுள்ளோம். இப்போது ககன்யான் போன்ற திட்டங்களுக்கு நாடு முழுமையாக தயாராக உள்ளது.

இந்த சாதனை வெறும் தொழில்நுட்ப மைல்கல் மட்டுமல்ல. தற்சார்பு பாரதத்தில் இது ஒரு புதிய அத்தியாயம். உலகின் முன்னணி விண்வெளி சக்திகளில் ஒன்றாக இந்தியா பெருமையுடன் உயர்ந்து நிற்கிறது. இந்தியாவின் விண்வெளித் திட்டம் ஆய்வகங்கள், ஏவுதள வாகனங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இது நமது தேசிய விருப்பங்கள், உலகளாவிய பார்வை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும்.

சந்திரயான் முதல் மங்கள்யான் வரை, மன உறுதியால் மிகவும் சவாலான இலக்குகளை குறிப்பிடத்தக்க சாதனைகளாக மாற்ற முடியும் என்பதை இந்தியா நிரூபித்துள்ளது.

குரூப் கேப்டன் சுபன்ஷு சுக்லாவின் வெற்றிகரமான விண்வெளிப் பயணம் அசாதாரண சாதனை. இது வெறும் தொழில்நுட்ப சாதனை மட்டுமல்ல, நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பின் செய்தி” என்று தெரிவித்தார்.

இந்தப் பாராட்டு விழாவில் முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சவுகான், விமானப்படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் ஏபி சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சபாநாயகர் பதவியின் கண்ணியத்தை அதிகரிக்க பாடுபட வேண்டும்: அமித் ஷா

புதுடெல்லி: ஆக.25-

சபாநாயகர் பதவியின் கண்ணியத்தை அதிகரிக்க சபாநாயகர்கள் பாடுபட வேண்டும் என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு புதுடெல்லியில் இன்று தொடங்கியது. இந்த இரண்டு நாள் மாநாட்டை உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கிவைத்தார். விழாவில், அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச சபாநாயகர்கள், மேல்சபை தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, டெல்லி துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனா, டெல்லி முதல்வர் ரேகா குப்தா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

இந்தியாவின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய சட்டமன்ற சபாநாயகர் விட்டல்பாய் படேலுக்கு தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.



நிகழ்ச்சியில் பேசிய அமித் ஷா, “நாட்டின் சட்டமன்ற வரலாறு தொடங்கிய நாள் இன்று. அது தொடங்கிய அதே சபையில் தற்போது நாம் இருக்கிறோம். நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய விட்டல்பாய் படேல், இந்த நாளில்தான் மத்திய சட்டமன்றத்தின் சபாநாயகரானார். இன்று இந்த அவையில் நாட்டின் அனைத்து சபாநாயகர்களும் மேலவை தலைவர்களும் கூடி உள்ளனர். ஒரு பொன்னான வரலாற்றை உருவாக்கிய மற்றும் ஒரு பொன்னான எதிர்காலத்தை நோக்கிச் செயல்படும் முழு சட்டமன்ற அமைப்பும் இன்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையில் உள்ளது.

சபாநாயகர் பதவியின் மரியாதை மற்றும் கண்ணியத்தை அதிகரிக்க நாம் அனைவரும் பாடுபடுவதற்கான ஒரு வாய்ப்பு இது. நாட்டு மக்களின் பிரச்சினைகளை எழுப்ப ஒரு பாரபட்சமற்ற தளத்தை வழங்க நாம் பாடுபட வேண்டும். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒரு பாரபட்சமற்ற வாதங்களை முன்வைக்க வேண்டும்.

அவையின் செயல்பாடுகள் அந்தந்த அவையின் விதிகள் மற்றும் சட்டப்படி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும். நமது 13,000 ஆண்டுகால வரலாற்றில் சட்டமன்றங்கள் தமது கண்ணியத்தை இழந்த போதெல்லாம், நாம் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருந்தது.” என தெரிவித்தார்.


## நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க சுதர்சன் ரெட்டியை ஆதரிப்போம்: முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: ஆக.25-

“நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க, நீதி மற்றும் மனிதநேயத்துக்காகப் போராடிய சுதர்சன் ரெட்டி இப்போது தேவைப்படுகிறார். அரசியலமைப்பை அழிக்க பாஜக முயல்வதால், அதைப் பாதுகாக்க அவர் நமக்குத் தேவை. அவரை நாம் ஆதரிப்போம்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு இண்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும் பி.சுதர்சன் ரெட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலினை இன்று சந்தித்து ஆதரவு கோரினார். அப்போது பேசிய முதல்வர் ஸ்டாலின், இவ்வாறு கூறினார்.

குடியரசு துணைத் தலைவர் தேர்தல் செப்டம்பர் 9ம் தேதி நடைபெற உள்ளது. ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் மகாராஷ்டிர ஆளுநரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான சி.பி.ராதாகிருஷ்ணன் நிறுத்தப்பட்டுள்ளார். எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணி சார்பில், தெலங்கானாவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி சுதர்சன் ரெட்டி நிறுத்தப்பட்டுள்ளார்.





குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை அடுத்து இண்டியா கூட்டணி தலைவர்களை சந்தித்து சுதர்சன் ரெட்டி நேரில் ஆதரவு கோரி வருகிறார். அந்தவகையில், இன்று சென்னை வந்த அவர், முதல்வர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்து ஆதரவு கோரினார்.

நிகழ்ச்சியில் பேசிய சுதர்சன் ரெட்டி, “தொலைநோக்குப் பார்வை மற்றும் புத்தாக்க சிந்தனையில் தமிழகம் முன்னணியில் உள்ளது. ஒரு நீதிபதியாக நான் அரசியலமைப்பை நிலைநிறுத்திக் கொண்டிருந்தேன். தற்போது குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளேன். நான் வெற்றி பெற்றால், இந்திய அரசியலமைப்பைப் பாதுகாக்க என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன்” என தெரி வித்தார்.

சுதர்சன் ரெட்டியை ஆதரித்துப் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், “ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் உங்களை குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த 60 ஆண்டுகளாக அவர் (சுதர்சன் ரெட்டி) நீதிக்காக பாடுபட்டுள்ளார். நேர்மையான நீதிபதியாக பணியாற்றி அரசியலமைப்பை பாதுகாத்தார்.

தமிழ்நாட்டின் உணர்வுகளை சுதர்சன் ரெட்டி மதிப்பார். அதனால்தான் அவர் தேசிய பொருளாதாரக் கொள்கையை எதிர்க்கும் ஒரு நிகழ்வில், தேசிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் பன்முகத்தன்மைக்கு வழிவகுக்காது என்று பேசினார். அவரை ஆதரிக்க இதைவிட சிறந்த காரணம் நமக்கு வேண்டுமா?

ஆனால் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இவரை நக்ஸல் ஆதரவாளர் என கூறியுள்ளார். பயங்கரவாதத்தை ஒழிக்க அவர்களால் முடியவில்லை. அதற்காக அவர் மீது பழி சுமத்த விரும்புகிறார்கள். தமிழ்நாட்டுக்கு எதிராக பாஜக எல்லாவற்றையும் செய்து வருகிறது. தமிழர் என்ற போர்வையில் அக்கட்சி ஆதரவை கோருகிறது. இது ஒரு பழைய தந்திரம். எனவே, நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க, நீதி மற்றும் மனிதநேயத்துக்காகப் போராடிய சுதர்சன் ரெட்டி இப்போது தேவைப்படுகிறார்” என்று கூறினார்.

நிகழ்ச்சியில், டி.ஆர். பாலு, கனிமொழி, திருச்சி சிவா, ஆ. ராசா, வில்சன், திருமாவளவன் உள்ளிட்ட இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தின் எந்த பகுதியிலும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு அனுமதியில்லை: அமைச்சர் தங்கம் தென்னரசு

சென்னை: ஆக.25-

“தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலும், ஹைட்ரோ கார்பன் தொடர்பான எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது.” என நிதி, சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாடு அரசு, கடந்த 20.02.2020 அன்று தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல (Protected Agricultural Zone – PAZ) சட்டம், 2020ஐ இயற்றியதன் மூலம் காவிரி டெல்டா பகுதியினை , பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்தது.





இச்சட்டத்தின் அடிப்படையில், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகள் ஆகிய டெல்டா பகுதிகளில் புதிதாக எரிபொருள், இயற்கை வாயு, நிலக்கரி மீத்தேன் மற்றும் ஷேல் வாயு போன்றவற்றின் இருப்பு குறித்த ஆராய்ச்சி, மற்றம் அகழ்வுத் தொழில்கள் ஆகியவை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. மேலும், கடந்த 2023 ஆம் ஆண்டு இத்தடை மயிலாடுதுறை மாவட்டத்துக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இதற்கிடையில், **M/s. Oil and Natural Gas Corporation Ltd., (ONGC)** நிறுவனமானது, ராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் இருப்பு குறித்து ஆய்வு செய்ய விண்ணப்பித்திருந்ததை தொடர்ந்து, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் **(State Environment Impact Assessment Authority – SEIAA) M/s. Oil and Natural Gas Corporation Ltd., (ONGC)**க்கு சுற்றுச்சூழல் அனுமதியினை நேரடியாக வழங்கியுள்ள செய்தி தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

இதனை அடுத்து **ONGC** நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியினை உடனே திரும்ப பெறுமாறு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைத்திற்கு தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியிலும், ஹைட்ரோ கார்பன் தொடர்பான எந்த ஒரு திட்டத்தையும் அனுமதிக்க முடியாது என்பதே முதல்வர் மு.க.ஸ்டாலினின் திடமான கொள்கை முடிவாகும். எனவே, தற்போது மட்டுமின்றி எதிர்காலத்திலும் நம் மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் இத்திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என திட்ட வட்டமாகத் தெரி வித்துக்கொள்கிறேன்.” எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக,ராமநாதபுரம் மாவட்டத்தில், 20 இடங்களில் ஹைட்ரோ கார்பன் சோதனை கிணறுகளை அமைக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளதாக தகவல் வெளியானது.

அதன்படி ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தனிச்சியம், பேய்குளம், கீழசெல்வனூர், கே.வேப்பங்குளம், பூக்குளம், சடயநேரி, கீழச்சிறுபோது, வல்லக்குளம், பனையடிஏந்தல், காடம்பாடி, நல்லிருக்கை, அரியக்குடி, காவனூர், காமன்கோட்டை, சிறுவயல், ஆழமலந்தல், சீனங்குடி அழகர்தேவன் கோட்டை, அடந்தனார் கோட்டை, ஏ.மணக்குடி உள்ளிட்ட பகுதிகளில் 20 சோதனை ஹைட்ரோ கார்பன் கிணறுகளை ரூ.675 கோடி செலவு செய்து தோண்ட ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியுள்ளதாக தகவல் வெளியானது.

இதற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும், விவசாயிகள் சங்கங்களும் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், அமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## மதுரை மாநாடு வெற்றி; மனசாட்சி உள்ள மக்களாட்சியை நிலைநாட்டுவது மட்டுமே இலக்கு: விஜய் கடிதம்

**சென்னை, ஆக.25–**

மதுரை மாநாட்டின் வெற்றி என்பது, உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பிலும், பங்களிப்பிலும் மட்டுமே சாத்தியமாகி இருக்கிறது. மனசாட்சி உள்ள மக்களாட்சியை நிலைநாட்டுவது மட்டுமே நம் இலக்கு என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கட்சித் தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதம்: மதுரையில் நடந்த 2வது மாநில மாநாட்டின் வெற்றி என்பது உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பிலும், பங்களிப்பிலும் மட்டுமே சாத்தியமாகி இருக்கிறது. எத்தனை மறைமுகத் தடைகள் உருவாக்கப்பட்டாலும், நமக்காக மக்கள் கூடும் திடல்கள் எப்போதும் கடல்களாகத்தான் மாறும் என்பதை உணர்ந்து,மாநாட்டுப் பணிகளை சிறப்புடன் மேற்கொண்ட நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மனம் நிறைந்த பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் மீது வீசப்படும் விமர்சனங்களில் நல்லவற்றை மட்டும் நமதாக்கி உரமேற்றுவோம். மற்றவற்றை புறந்தள்ளிப் புன்னகைப்போம். மக்களோடு மக்களாக இணைந்து நிற்கும் மக்கள் அரசியல் மட்டுமே, நமது நிரந்தர அரசியல் நிலைப்பாடு. மனசாட்சி உள்ள மக்களாட்சியை நிலைநாட்டுவது மட்டுமே நம் இலக்கு.

1967, 1977 தேர்தல் அரசியல் வெற்றி விளைவுகளை வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் நிகழ்த்திக் காட்டப் போவது நிச்சயம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## குரோம்பேட்டை வாசன் ஐ கேர் கண் மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் நீரிழவு விழித்திரை நோய்க்கு இலவச சிக்கிச்சை

**இடைவிடாமல் செல்போன், கணினி பார்பதை தவிர்க்குமாறும் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தார் டாக்டர் கௌஷிக்**

குரோம்பேட்டை. ஆக.25-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை தனியார் மருத்துவமனையான வாசன் ஐ கேர் கண் மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் நீரிழவு விழித்திரை நோய்க்கு இலவச சிகிச்சை அளிக் கபடும் என மருத்துவர் தெரிவித்தனர்.

இது குறித்து டாக்டர் கௌஷிக் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் நீரிழவு விழித்திரை நோய்க்கு இலவச சிகிச்சை அளிக்க தமிழக அரசு அங்கீகாரம் அளித்துள்ளது எனவும் விழித்திரை, மாறுகண் உள்ளிட்ட குறைபாடுகள் முற்றிலும் இலவசமாக சிகிச்சை அளிக்கபடும் என்றும் செப்டம்பர் 1 தேதி முதல் 30 ஆம் தேதி வரை கண் குறைபாடுகள் குறித்து ஆலோசனை மற்றும் சிகிச்சை முற்றிலும் இலவசம் எனவும் உயர்தர தொழில் நுட்பத்தை கொண்டு கண்சிக்கிசை மேற்கொள்வதாகவும் நீரிழவு உள்ளவர்களுக்கு கண்களின் ஓர பார்வை குறை ணபாடு உருவாக தொடங்கும் எனவும் வருடம் ஒருமுறை கண் பரிசோதனையின் போது நிரிழவு பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் கண் தானம் அளித்தவர்களிடம் பட்டன் அளவில் உள்ள கருவிழியை எடுத்து இருவருக்கும் இரு கண்களில் உள்ள கருவி ழியில் நான்கு பேருக்கு பார்வை அளிக்கலாம் எனவும் வாசன் ஐ கேர் மருத்துவ மனையில் அரசு கூறும் விதிமுறைகளுக்கு உட்பட்டு முற்றிலும் இலவசமாக சிகிச்சை அளிக்கபடும், சிறுவயதில் கண்புரை வராமல் தடுக்க செல்போன், கனினி மற்றும் அதிக வெளிச்சத்தை பார்பதை தவிர்க்க வேண்டும் என தெரிவித்தார்.





## கல்லலில் எழுத்தாளர்கள் சங்க கல்லல் கிளை மாநாடு

கல்லல், ஆக.25-

சிவகங்கை மாவட்டம் கல்லல் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க கல்லல் கிளையின் முதலாவது மாநாடு விஜெயம் அரங்கத்தில் நடைபெற்றது. கல்லல் கிளையின் தலைவர் சுப்பிரமணியன் தலைமையேற்றார். மாணவி புவனேஸ்வரியின் வரவேற்பு பரதநாட்டியத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. துணைத்தலைவர் விநாய கமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். மாவட்டத் தலைவர் பேராசிரியர் முனைவர் தங்க முனியாண்டி மாநாட்டை தொடங்கி வைத்து தொடக்கவுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் முனைவர் அன்பரசன் புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வாழ்த்துரை வழங்கினார். புதிய நிர்வாகிகளாக விநாயக மூர்த்தி பிரபு சித்ராதேவி ஷோபனா இராசு சண்முகம் பழனியப்பன் சாமிநாதன் சண்முக சுந்தரம் ஜோதிமணி சித்திரைச் செல்வி பார்வதி ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.



சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழக மாவட்ட வருவாய் அலுவலர் சிவதாஸ், காரைக்குடி குளோபல் மருத்துவமனை இயக்குனர் குமரேசன் மகா பிரபு வின் பத்தாவது நூலான அழகி நூலை வெளியிட மாவட்டக் குழு உறுப்பினர் காரைக்குடி கவிஞர் சாதிக் அந்நூலை பெற்றுக்கொண்டு நூல் அறிமுக உரையாற்றினார். முன்மாதிரி அன்பாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் சரவணன், அன்பாசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியை சாந்தி, பணி நிறைவு பெறும் கல்லல் கிளை நூலகர் வசந்த செல்வி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். புலவர் காளிராசா தலைமையில் "அம்மா என்கிற அன்பு" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர்கள் தமிழ்க்கனல் துஷ்யந்த் சரவணராஜ் எட்வின் கலையரசன் முனைவர் உஷா மகா பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர். பணி நிறைவு பேராசிரியர் கோச்சடை, மாவட்டத் துணைச் செயலாளர் ராஜேந்திரன் வாழ்த்துரை வழங்கினர். புத்தகக் கண்காட்சியும், ஓவியக் கண்காட்சியும் இடம் பெற்றது. மாணவர்கள் கவிப்பேரரசர், புவனேஷ், தன்ஸிரா பேகம் சுபாஷினி ஸ்வாஷ்திகா ஆகியோர் கவிதை படைத்தனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் இடம் பெற்றது. ஓவியப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சிவசங்கர் சுவேதா சௌமியா ஆகியோருக்கு நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது. மாவட்டக் குழு உறுப்பினர்கள், கிளைப் பொறுப்பாளர்கள், மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## குண்டாற்றில் மணல் குவாரி அமைக்க கிராம மக்கள் எதிர்ப்பு ஆய்வுக்கு வந்த அதிகிரிகளிடம் வாக்குவாதம்

ராமநாதபுரம், ஆக.25-

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே மண்டலமாணிக்கம் குண்டாற்றில் அரசு மணல் குவாரி அமைக்க எதிர்ப்பு தெரிவித்த கிராம மக்கள் ஆய்வுக்கு வந்த அதிகாரிகளை தடுத்து நிறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.பரமக்குடி கோட்டாட்சியர் சரவண பெருமாள் தலைமையில், வட்டாட்சியர் ஸ்ரீராம்,மண்டல துணை வட்டாட்சியர் வேலவன் மற்றும் வருவாய்த்துறையினர் மண்டல மாணிக்கம் குண்டாற்றில் அரசு சார்பில் மணல் குவாரி அமைப்பதற்காக ஆய்வுக்கு வந்தனர்.இதனை அறிந்த மண்டலமாணிக்கம் கிராம மக்கள் ஆய்வுக்கு வந்த அதிகாரிகளை தடுத்து நிறுத்தி குண்டாற்றில் மணல் குவாரி அமைக்க கூடாது என எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் மணல் குவாரி அமைக்க கூடாது என எதிர்ப்பு தெரிவித்து கிராம மக்கள் சார்பில் சென்ற வாரம் கமுதி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.இந்நிலையில் கிராம மக்கள் மற்றும் அதிகாரிகளிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டு பதற்றம் நிலவியதை தொடர்ந்து ஆய்வு மேற்க்கொள்ள முடியாமல் அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.



## தேவகோட்டை இரவுசேரி இறக்கம் ஆதிபராசக்தி கோவிலில் 501 கஞ்சிகளையம் எடுத்து வழிபாடு செய்தனர்

சிவகங்கை, ஆக.25-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை இரவுசேரி இறக்கம் ஆதிபராசக்தி கோவில் உள்ளது. இக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் கஞ்சிகளையம் வழிபாடு சிறப்பாக நடைபெறும் அதே போல் இந்த விழா 16ம் ஆண்டு இவ்விழாவை முன்னிட்டு வேள்வி பூஜை உடன் தொடங்கி வழிபாடு பூஜை, 51 அக்கினி சட்டி, முளைப்பாரி விழா நடைபெற்றது.

கஞ்சிகளையம் விழாவை நகர் மன்ற தலைவர் சுந்தரலிங்கம் தொடங்கி வைத்தார்.

சிலம்பணி ஜய்யப்பன் கோவில் இருந்து கஞ்சிகளையம் புறப்பட்டு சிலம்பணி விநாயகர் கோவில், புவனேஸ்வரி அம்மன் கோவில், பேருந்து நிலையம், சிவன்கோவில் வழியாக கோவில் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும் தீபாரனையும் நடைபெற்றது. இவ்விழாவில் தேவகோட்டை நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.




## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய முன்னாள் பொது செயலாளர் தோழர் சுதாகர ரெட்டிக்கு புகழ் அஞ்சலி

மணப்பாறை, ஆக.25-

திருச்சி மாவட்டம் மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வாளகத்தில் அகில இந்திய முன்னாள் பொது செயலாளர் தோழர் சுதாகர ரெட்டிக்கு புகழ் அஞ்சலி செலுத்தபட்டது

இன் நிகழ்வுக்கு தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் தலைமை வகித்தார் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் நகர துணைச் செயலாளர்கள் தங்கராஜ் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தனர் தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர்கள் பழனிசாமி ஜன சக்தி உசேன் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சௌக்கத் அலி வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள் பொருளாளர் நல்லுச்சாமி தெற்கு ஒன்றி துணைச் செயலாளர் பிரேமா முன்னல் ஒன்றிய செயலாளர் தங்கராசு பொண்ணுச்சாமி குருசாமி சின்னகண்ணு பெருமாள் தங்கவேல் நகர குழு உறுப்பினர் கண்ணன் பழனிசாமி உட்பட நகரம், தெற்கு, வடக்கு ஒன்றிகுழு உறுப்பினர்கள் திருவுருவ படத்திற்கு மலர் துவி புகழ் அஞ்சலி செலுத்தினர்கள்.

## "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 26.8.2025 அன்று

## தேவகோட்டை நகராட்சி, சாக்கோட்டை, காளையார்கோவில், சிவகங்கை, திருப்புவனம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

**மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்**

சிவகங்கை, ஆக.25-

சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்க ப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 26 ஆம் தேதி சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 22, 23, 27 ஆகிய பகுதிகளுக்கென தேவகோட்டை காந்தி ரோட்டில் அமைந்துள்ள சிஜிஷி மஹாலிலும், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட டி. சூரக்குடி, சொக்கலிங்கம்புதூர், பி.முத்துப்பட்டிணம், நேமம் ஆகிய பகுதிகளுக்கென பூவான்டிபட்டி ஊராட்சியில் அமைந்துள்ள லட்சுமி மஹா லிலும், காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அதப்படக்கி, மல்லல், நாடமங்கலம், பெரியகண்ணனூர், உடகுளம், செம்பனூர், செங்குளம் ஆகிய பகுதிகளுக்கென சாத்தரசன்கோட்டை ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும்,




சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காஞ்சிரங்கால், அரசனேரி கீழமேடு, அரசானிபட்டி, இலந்தைகுடிபட்டி, எம்.ஜி.ஆர் நகர், டி.புதூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென காஞ்சிரங்கால் ஊராட்சியில் அமைந்துள்ள பிரகாஷ் மஹாலிலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புலியூர் சயனாபுரம், மாங்குடி அம்பலத்தாடி, இலந்தைக்குளம் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென புலியூர் சயனாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள யாதவர் திருமண மண்டபத்திலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூலாங்குறிச்சி, அதிரம்பட்டி, திருக்கோளக்குடி, தூவார் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென பூலாங்குறிச்சி ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது. மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## செப்டம்பர் 7ஆம் தேதி இரவு வானில் நடைபெறும் அதிசயத்தைக் காண சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் அழைப்பு

சிவகங்கை, ஆக.25-


சிவகங்கை தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி செப்டம்பர் 7ஆம் தேதி இரவு வானில் நடைபெறும் அதிசயத்தை காண அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் தகவல்களின்படி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது. இதனால் பூமியின் நிழல் சந்திரனில் விழுகிறது. இது ஒரு இயற்கையான நிகழ்வு. இதை நாம் அனைவரும் பாதுகாப்பாக எந்தத் தீங்கும் இல்லாமல் பார்க்க இயலும்.

செப்டம்பர் 7ஆம் தேதி இரவு 8:59 மணிக்கு ஆரம்பித்து செப்டம்பர் 8ஆம் தேதி விடியற்காலை 1:26 மணி வரை சந்திர கிரகணம் நடைபெறும். சந்திரன் பூமியின் நிழலால் சுமார் 85 நிமிடங்களுக்கு முழுமையாக மறைக்கப் படும். இதனால் முழு சந்திர கிரகணம் ஏற்படும். பகுதி கிரகண கட்டத்தில் சந்திரன் மேலும் மேலும் மறைக்கப்படுவதை நாம் காணலாம். முழு கிரகணத்தின்போது சந்திரன் உண்மையில் அடர் சிவப்பு நிறத்தில் தோன்றும்.

பகுதி கிரகணம் செப்டம்பர் 7ஆம் தேதி மாலை 8:58 மணிக்கு சந்திரன் முதலில் பூமியின் மங்கலான பிணம்ப்ரல் புறநிழல்பகுதிக்குள் நுழையும். இதை நம் கண்களால் பார்ப்பது மிகவும் கடினமாக இருக்கும். பின்னர் இரவு 9:57 மணிக்கு சந்திரன் இருண்ட அம்ப்ரல் கருநிழல் பகுதிக்குள் நுழையும். நமது கண்களால் சந்திரன் மேலும் மேலும் கிரகணம் அடைவதை மிக எளிதாக காணலாம். இரவு 11:01 மணி முதல் அதிகாலை 12:33 மணி வரை சந்திரன் முழுமையாக மறையும். நமது வளிமண்டலத்தில் இருந்து சூரிய ஒளி விலகுவதால் சந்திரன் வானத்திலிருந்து முழுமையாக மறைவதற்கு பதிலாக அடர் சிவப்பு நிறத்தை கொண்டிருக்கும். அதிகாலை 1:26 மணிக்கு சந்திரன் அம்ப்ரல் கருநிழல் பகுதியை முழுவதுமாக விட்டு வெளியேறும். அதிகாலை 2:25 மணிக்கு புறநிழல் பகுதியை விட்டு வெளியேறும்.

**5 மணி நேர சந்திர கிரகணம்**






இந்த சந்திர கிரகணத்தை நம் கண்களா லோ தொலை நோக்கி அல்லது பைனாகுலர் மூலமாகவோ சந்திர கிரகணத்தை காண்பது முற்றிலும் பாதுகாப்பானது. கிரகணங்கள் வெறும் நிழல்களின் விளையாட்டுதான். அவை மனிதர்கள் விலங்குகள் அல்லது உணவுப் பொருட்களுக்கு எந்த தீங்கும் விளைவிக்காது. கிரகணங்கள் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாக இருக்கும். இதை தவற விடாதீர்கள். அடுத்த சந்திர கிரகணம் 31.12.2028 அன்று தான் பார்க்க முடியும்.







## தீபாவளிக்கு வெளியாகிறது 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி'. இதில் எஸ்.ஜே.சூர்யா, சீமான், கீர்த்தி ஷெட்டி, யோகி பாபு, கவுரி கிஷண், ஷாரா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ரவிவர்மன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு அனிருத் இசை அமைத்துள்ளார். ரவுடி பிக்சர்ஸ் சார்பில் நயன்தாரா, செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோ நிறுவனம் சார்பில் எஸ்.எஸ்.லலித்குமார் தயாரித்துள்ளனர். இதன் டீஸர் ஆக. 27ம் தேதி வெளியாகிறது.

இந்நிலையில் இந்தப் படத்தின் வெளியீட்டுத் தேதியைப் படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி தீபாவளியை முன்னிட்டு அக்.17ம் தேதி வெளியாகிறது.



## மீண்டும் இணையும் விஷால் அஞ்சலி கூட்டணி

ரவி அரசு இயக்கத்தில் விஷால் நடித்து வரும் படத்தில் அஞ்சலி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார்.

ரவி அரசு இயக்கத்தில் விஷால் நடித்து வரும் படத்தின் படப்பிடிப்பு ஊட்டியில் நடைபெற்று வருகிறது. இதில் முக்கியமான சண்டைக் காட்சி ஒன்றினை திலீப் சுப்பராயன் தலைமையில் காட்சிப்படுத்தி வருகிறார்கள். இப்படத்தினை ஆர்.பி.சௌத்ரி மற்றும் விஷால் இருவரும் இணைந்து தயாரித்து வருகிறார்கள். ஒரே கட்டமாக படப்பிடிப்பினை முடிக்க வேண்டும் என்று படக்குழுவினர் திட்டமிட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

இப்படத்தில் துஷாரா விஜயன், தம்பி ராமையா, அர்ஜெய் உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். தற்போது இதில் முக்கிய கதாபாத்தில் நடிக்க அஞ்சலி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். விஷால் ‐ அஞ்சலி இருவரும் இணைந்து 'மதகஜராஜா' படத்தில் நடித்துள்ளனர். அப்படம் மாபெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது அதே கூட்டணி இப்படத்திலும் இணைந்து பணிபுரிய இருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்துக்கு ஒளிப்பதிவாளராக ரிச்சர்ட் எம்.நாதன், எடிட்டராக ஸ்ரீகாந்த், கலை இயக்குநராக துரைராஜ், இசையமைப்பாளராக ஜி.வி.பிரகாஷ் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இப்படத்தினை வெளியிட முடிவு செய்திருக்கிறார்கள்.



## பல படங்களில் திருப்தியின்றி நடித்துள்ளேன்: சமந்தா

பல படங்களில் தனக்கு திருப்தி அளிக்காமல் நடித்திருப்பதாக சமந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வருபவர் சமந்தா. சமீபமாக அதிகமான படங்களில் அவர் நடிப்பதில்லை, மேலும் தயாரிப்பாளராகவும் மாறியிருக்கிறார். உடற்பயிற்சி, வெளிநாட்டுப் பயணம் உள்ளிட்டவற்றில் தான் அதிகப்படியான நேரத்தினை செலவழித்து வருகிறார் சமந்தா.

இது தொடர்பாக சமந்தா அளித்துள்ள பேட்டியில், "இப்போது என்னை உற்சாகப்படுத்தும் விஷயங்களை மட்டுமே செய்து வருகிறேன். அது சினிமா, உடற்பயிற்சி எதுவாக இருந்தாலும் சரி தான். முந்தைய காலங்களில் பல படங்களில் தொடர்ச்சியாக நடித்துள்ளேன். ஆனால், உண்மையைச் சொன்னால் அவற்றில் பல படங்கள் எனக்கு திருப்தி அளிக்கவில்லை.

இப்போது எந்த சினிமாவாக இருந்தாலும் அதனை முழுமனதுடனும், கவனத்துடனும் செய்து வருகிறேன். ஒரே நேரத்தில் ஐந்து படங்களில் நடிக்க வேண்டும் என்ற பயமெல்லாம் இப்போது இல்லை. என் உடல் என்ன சொல்கிறது என்பதை கேட்க வேண்டும் என்று புரிந்துக் கொண்டேன். அதனால் மட்டுமே வேலையை குறைத்துவிட்டேன்" என்று தெரிவித்துள்ளார் சமந்தா.

## ரஜினியுடன் சந்திப்பு: சிம்ரன் நெகிழ்ச்சி



ரஜினியுடனான சந்திப்பு குறித்து சிம்ரன் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

'டூரிஸ்ட் பேமிலி' படம் பார்த்துவிட்டு படக்குழுவினரை அழைத்து பாராட்டினார் ரஜினி. அப்போது சிம்ரன் மும்பையில் இருந்ததால் அவர் ரஜினியை சந்திக்கவில்லை. தற்போது ரஜினியை சந்தித்து பேசியிருக்கிறார் சிம்ரன். இது தொடர்பான புகைப்படங்களையும் இணையத்தில் வெளியிட்டுள்ளார்.

ரஜினியுடனான சந்திப்பு குறித்து சிம்ரன், "சில சந்திப்புகள் காலத்துக்கு அப்பாற்ப்பட்டது. எங்கள் சூப்பர் ஸ்டாருடன் ஒரு அழகான தருணத்தை பகிர்ந்ததற்காக நன்றியுள்ளவளாக இருக்கிறேன். 'டூரிஸ்ட் பேமிலி' மற்றும் 'கூலி' படத்தின் வெற்றிகள் இந்தச் சந்திப்பை இன்னும் சிறப்பானதாக மாற்றின" என்று தெரிவித்துள்ளார்.

கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய 'பேட்ட' படத்தில் ரஜினி ‐ சிம்ரன் இணைந்து நடித்தனர். அதுவே இருவரும் இணைந்து நடித்த முதல் படம் என்பது குறிப்பிடத்தக்கது. அதில் சிறிய கதாபாத்திரத்தில் தான் சிம்ரன் நடித்திருப்பார்.



## லுங்கி நிகிடி பந்துவீச்சில் அசத்தல்: 2வது ஒருநாள் போட்டியிலும் ஆஸி.யை வீழ்த்தியது தென் ஆப்பிரிக்கா

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான 2வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 84 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்க அணி தொடரை 20 என கைப்பற்றியது.

குயின்ஸ்லாந்தின் மெக்கே நகரில் உள்ள கிரேட் பேரியர் ரீஃப் மைதானத்தில் நேற்று நடைபெற்ற 2வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி 49.1 ஓவர்களில் 277 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக மேத்யூ பிரீட்ஸ்கே 78 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 88 ரன்களும் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 87 பந்துகளில், ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 74 ரன்களும் விளாசினர்.

டோனி டி ஸோர்ஸி 38, வியான் முல்டர் 26, கேசவ் மகாராஜ் 22 ரன்கள் சேர்த்தனர். ஆஸ்திரேலிய அணி சார்பில் ஆடம் ஸாம்பா 3 விக்கெட்களை வீழ்த்தினார். சேவியர் பார்ட்லெட், நேதன் எலிஸ், மார்னஷ் லபுஷேன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர். 278 ரன்கள் இலக்குடன் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 37.4 ஓவர்களில் 193 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஜோஷ் இங்லிஷ் 74 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 10 பவுண்டரிகளுடன் 87 ரன்கள் விளாசினார்.

டிராவிஸ் ஹெட் 6, கேப்டன் மிட்செல் மார்ஷ் 18, கேமரூன் கிரீன் 35, மார்னஷ் லபுஷேன் 3, அலெக்ஸ் கேரி 13, ஆரோன் ஹார்டி 10 ரன்களில் நடையை கட்டினர். தென் ஆப்பிரிக்க அணி தரப்பில் லுங்கி நிகிடி 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

நந்த்ரே பர்கர், செனுரன் முத்துசாமி ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக லுங்கி நிகிடி தேர்வானார். 84 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்க அணி 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரை 20 என கைப்பற்றியது.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இருதரப்பு ஒருநாள் போட்டி தொடரை தென் ஆப்பிரிக்க அணி 5வது முறையாக தொடர்ச்சியாக கைப்பற்றியுள்ளது.

கெய்ன்ஸ் நகரில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் தென் ஆப்பிரிக்க அணி 98 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கடைசி மற்றும் 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நாளை (24ம் தேதி) இதே மைதானத்தில் நடைபெறுகிறது.

## சின்க்ஃபீல்டு கோப்பை செஸ்: 4வது சுற்றை டிரா செய்தார் பிரக்ஞானந்தா



அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் சின்க்ஃபீல்டு கோப்பை செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 4வது சுற்றில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், பிரான்ஸின் மாக்சிம் வச்சியர் லாக்ரேவுடன் மோதினார். இந்த ஆட்டம் 56வது நகர்த்தலின் போது டிரா ஆனது.

மற்றொரு இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.பிரக்ஞானந்தா, அமெரிக்காவின் சாமுவேல் சேவியனுடன் மோதினார். இந்த ஆட்டம் 29வது நகர்த்தலின் போது டிராவில் முடிவடைந்தது.

அமெரிக்காவின்பேபியானோ கருனா, உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசத்தோரோவை எதிர்த்து விளை யாடினார். இதில் பேபியானோ கருனா 30வது நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். அமெரிக்காவின் லெவோன் அரோனியன், போலந்தின் டுடா ஜான் கிரிஸ்டோஃப் மோதிய ஆட்டம் டிரா ஆனது.






## ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்: தங்கம் வென்றார் இளவேனில் வாலறிவன்

ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் கஜகஸ்தானில் உள்ள ஷிம்கென்ட் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் 253.6 புள்ளிகளை குவித்து முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார்.

சீனாவின் சின்லு பெங் 253 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தையும், கொரியாவின் யூன்ஜி குவான் 231.2 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். ஜூனியர் பிரிவில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் அணிகள் பிரிவில் சாம்பவி ஷ்ரவன், ஹிருதய ஸ்ரீ கொண்டூர், இஷா அனில் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 1896.2 புள்ளிகளை குவித்து ஆசிய சாதனையுடன் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றது.

## கேரளாவில் அர்ஜெண்டினா உடன் விளையாடும் அணி எது? ஆஸி., சவுதி, கத்தாருக்கு வாய்ப்பு



வரும் நவம்பர் மாதம் கேரள மாநிலத்தில் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா கால்பந்து அணி, நட்பு ரீதியான போட்டியில் விளையாடுவது உறுதி ஆகியுள்ளது. இதனை அந்த அணியின் நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், அர்ஜெண்டினா அணி உடன் இதில் விளையாட உள்ள மற்றொரு அணி எது என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. அது இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில் அது குறித்து இந்தப் போட்டியின் ஏற்பாட்டாளரான ரிப்போர்ட்டர் பிராட்காஸ்டிங் கம்பெனி கூறியுள்ளது.

"கடந்த சில தினங்களுக்கு முன்னர் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா கால்பந்து அணி இந்தியாவில் விளையாடுவது குறித்த மின்னஞ்சலை நாங்கள் பெற்றோம். இருந்தும் இது குறித்து முதலில் அர்ஜெண்டினா கால்பந்து அணி அறிவித்தால் நன்றாக இருக்கும் என கருதி நாங்கள் அமைதி காத்தோம். அதன்படி அந்த அணி நிர்வாகம் இந்த அறிவிப்பை தற்போது வெளியிட்டுள்ளது.

திருவனந்தபுரத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் அர்ஜெண்டினா உடன் விளையாட ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, கத்தார் மற்றும் பிரேசில் உள்ளிட்ட அணிகள் உடன் பேசி வருகிறோம். இதை அடுத்த ஒரு வார காலத்தில் இறுதி செய்து விடுவோம். இந்த பயணத்தில் அர்ஜெண்டினா அணி ரசிகர்களை சந்திக்கவும் உள்ளது. இதற்காக சுமார் 45 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதை மலப்புரம் அல்லது கோழிக்கோட்டில் நடத்த திட்டமிட்டுள்ளோம். இந்த போட்டியை நடத்த சுமார் 400 கோடி ரூபாய் வரை செலவு ஆகும். இரண்டு தேசிய கால்பந்து அணிகள் இதில் விளையாடுகின்றன. அதனால் நிதி விவகாரம் எங்களுக்கு பெரிய சிக்கலாக இருக்காது. அதிக அளவில் எங்களுக்கு ஸ்பான்சர்கள் கிடைத்துள்ளனர். அர்ஜெண்டினா அணி உடன் நாங்கள் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் படி இந்த ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பரில் இந்தியாவில் அந்த அணி விளையாட வேண்டுமென குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால், அந்த அணி நிர்வாகம் அடுத்த ஆண்டு வருவதாக முதலில் தெரிவித்தது. அதுதான் இந்த ஆட்டம் சார்ந்து சர்ச்சை எழ காரணம். இப்போது அனைத்துக்கும் தீர்வாக வரும் நவம்பரில் அர்ஜெண்டினா அணி இந்தியாவில் விளையாடுகிறது" என அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆண்டோ அகஸ்டின் தெரிவித்துள்ளார். நடப்பு உலக சாம்பியனான அர்ஜெண்டினா அணி நவம்பரில் கேரள மாநிலத்தில் விளையாட உள்ள செய்தி இந்திய அளவில் கவனம் பெற்றுள்ளது.

# ''ஆட்டோ வாங்குவதற்கு 75 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கப்படும்'' -இபிஎஸ் சூப்பர் தேர்தல் வாக்குறுதி






திருச்சி, ஆக.25-

திருச்சிராப்பள்ளி திருவெறும்பூர் தொகுதியில் மக்களை சந்தித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அடுத்ததாக திருச்சி காந்தி மார்க்கெட் அருகே வெல்லமண்டி வீதியில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மத்தியில் எழுச்சியுரை நிகழ்த்தினார்.

"திருச்சி மாநகராட்சிக்கு அதிமுக ஆட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் மூலம் 1000 கோடி ரூபாய் நிதி வழங்கி, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினோம். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு திருச்சி மாநகராட்சியில் மின்கட்டணம் 67% உயர்வு, வரிகளையும் 100 முதல் 150% வரை உயர்த்தி விட்டனர். குப்பைக்கும் வரி போட்ட ஒரே அரசு திமுக அரசு.

விலைவாசியல் மக்கள் படும் துன்பம் பற்றி திமுகவுக்கு கவலையில்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிமுக ஆட்சியில் அரிசி, பருப்பு, எண்ணெய் என்ன விலை என்னஞ் இப்போது என்ன விலை என்று ஒப்பிட்டுப் பாருங்கள். அதிமுக ஆட்சியில் விலைவாசி உயரும்போது விலை கட்டுப்பாட்டு நிதி என்று ரூ.100 கோடி ரூபாய் ஒதுக்கி, அதன்மூலம், அண்டை மாநிலங்களில் எங்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கிறதோ அங்கிருந்து கொள்முதல் செய்து, கூட்டுறவு சங்கங்கள் மூலம் தமிழக மக்களுக்குக் கொடுத்தோம்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. மக்களுக்காக திமுக ஆட்சி செய்யவில்லை, வீட்டு மக்களுக்காக ஆட்சி செய்கிறது. இந்த குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்டும் தேர்தல் இது. அரசியல் காழ்ப்புணர்ச்சியில் பேசவில்லை, யதார்த்த உண்மையைச் சொல்கிறேன். திமுக குடும்பத்தைத்தான் அரசாங்கமாகப் பார்க்கிறார்கள்.

நாடு சிறந்து வளர கல்வி வளர்ச்சி முக்கியம். எனவே அதிகமாக நிதி ஒதுக்கி கல்வியில் புரட்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தினோம். அதிமுக ஆட்சியில்தான் கற்போர் எண்ணிக்கை அதிகரித்தது. அதிமுகவின் 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் 17 மருத்துவக் கல்லூரிகள் கொண்டுவந்து சிறப்பான சிகிச்சை அளித்தோம். திமுகவினால் ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாவது கொண்டுவர முடிந்ததா?

67 கலைக்கல்லூரி, 21 பாலிடெக்னிக் கல்லூரி, 4 பொறியியல் கல்லூரி, 7 சட்டக்கல்லூரி, 4 வேளாண்மைக் கல்லூரி, 5 கால்நடை மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிலையம் என பல கல்லூரிகளைத் திறந்து இந்தியாவிலேயே கல்வியில் முதன்மை மாநிலம் என்ற இலக்கை 2019லேயே அடைந்தோம்.

ஏழை, எளிய, கிராமப்புற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சீருடை, புத்தகம், புத்தகப்பை, சைக்கிள், விஞ்ஞானக் கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அம்மாவின் எண்ணத்தில் உதித்த அற்புதமான திட்டம் லேப்டாப் வழங்கும் திட்டம். அதிமுக ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் ரூ.7300 கோடி நிதி ஒதுக்கீட்டில், 52 லட்சத்து 35 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.12 ஆயிரம் மதிப்புள்ள லேப்டாப் கொடுக்கப்பட்டது.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் தாராளமாக கிடைக்கிறது. இளைஞர்கள் சீரழிகிறார்கள், நான் பலமுறை சொல்லியும் முதல்வர் கண்டுகொள்ளவில்லை. அதனால் போதை மாநிலமாக உருவாகி விட்டது. மாணவர்கள் போதைக்கு அடிமையாகி றார்கள் என்பதை முதல்வர் ஸ்டாலினே ஒப்புக்கொண்டுவிட்டார்.

இன்றைக்கு முதல்வர், 'போதையின் பாதையில் செல்லாதீர்கள்' என்று முதல்வர் பேசுகிறார். நாங்கள் சொன்னபோதே நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. துணை முதல்வரும் போதைக்கு எதிராக உறுதிமொழி எடுக்கிறாராம், எல்லாரும் கெட்டு முடிந்தபிறகு, இப்படி நாடகம் போடுகிறார்கள். போதைக்கு அடிமையானவர்களால்தான் கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை நடக்கிறது. மீண்டும் அதிமுக ஆட்சி அமையும் போது இவை எல்லாமே சரி செய்யப்படும்.

கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் சிகிச்சை பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 2000 அம்மா மினி கிளினிக் தொடங்கினோம். அதில் ஒரு எம்பிபிஎஸ் மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் பணியில் அமர்த்தி, கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளித்தோம். திமுக அரசு ஏழைகளுக்கு சிகிச்சை அளிப்பதிலும் காழ்ப்புணர்ச்சி பார்த்து அதனை மூடிவிட்டது. மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்ததும் 4000 அம்மா மினி கிளினிக் திறக்கப்படும்.

ஏழைப் பெண்களின் பொருளாதார சூழலால் திருமணம் தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக திருமண உதவித் திட்டம் ரூ.25 ஆயிரம், ரூ.50 ஆயிரம் கொடுத்தோம். தாலிக்குத் தங்கம் திட்டம் மூலம் ஒரு பவுன் தங்கம் 6 லட்சம் பேருக்குக் கொடுத்தோம். இதனை திமுக அரசு நிறுத்திவிட்டது. மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்ததும் இத்திட்டம் தொடரும். அதோடு மணப்பெண்ணுக்கு பட்டுசேலை, மணமகனுக்கு பட்டுவேட்டி கொடுக்கப்படும். ஏழைகளுக்கான திட்டங்களை நிறுத்தியதில் தான் திமுக சாதனை படைத்திருக்கிறது. மீண்டும் அந்த திட்டங்கள் எல்லம் தொடரும்.

கட்டுமானப் பொருட்களின் விலையும் உயர்ந்துவிட்டது. இனி ஏழை மக்கள் வீடு கட்டவே முடியாத அளவுக்கு விலை உயர்ந்துவிட்டது. இரவில், கனவில் வேண்டுமானால் வீடு கட்டலாம். தேர்தல் அறிக்கையில் கட்டுமானப் பொருட்கள் விலை உயரும்போது அத்தியாவசிய பொருட்களின் பட்டியலில் அவற்றை இணைப்பேன் என்றனர், ஆனால் செய்யவில்லை. ஏனெனில் எல்லாவற்றில் இருந்தும் கமிஷன் வருது, காசு வந்தால் திமுகவுக்கு போதும்.

சமீபத்தில் எங்களுக்குக் கிடைத்த செய்தி, ஜல்லி, எம்.சாண்ட் உரிமையாளர்களிடம் ஒரு டன்னுக்கு 100 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் வாய்மொழி உத்தரவிட்டதாகத் தகவல். எப்படி மக்களால் இதை தாக்குப்பிடிக்க முடியும்? இந்த ஆட்சி மீண்டும் வரப்போவதில்லை என்பது அவர்களுக்கே தெரிந்துவிட்டது, எரிகிற வீட்டில் பிடுங்குவது மிச்சம் என்று கொள்ளையடித்து வருகின்றனர்.

நான் முதல்வரான போது, பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநர் உத்தரவிட்டார். அதன்படி பெரும்பான்மை நிரூபிக்கும் நாளன்று சட்டமன்றத்தில் கூச்சல் போட்டு டேபிளில் ஏறி டான்ஸ் ஆடினார்கள். சபாநாயகர் இருக்கையில் அமர்ந்தனர். பெரும்பான்மை நிரூபித்த பின் அதனை ஏற்றுக்கொள்ளாத ஸ்டாலின் சட்டையைக் கிழித்துவிட்டு நடந்தார். அதிமுக மீண்டும் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் அப்போது சட்டையுடன் வேட்டியையும் கிழித்துக்கொண்டு சாலையில் நடக்கப்போகிறார்.

கொரோனா காலத்தில் ஓராண்டு ரேஷனில் விலையில்லா பொருட்கள் கொடுத்தோம், குடும்ப அட்டைக்கு 1000 ரூபாய் கொடுத்தோம். கர்ப்பிணி தாய்மார்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் என 7 லட்சம் பேருக்கு மூன்று வேளை உணவு கொடுத்தோம். தைப் பொங்கலை அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட பொங்கல் பரிசு 2500 ரூபாய் கொடுத்தோம். கொரோனா காலத்தில் கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் தேர்வு நடத்தினோம், பள்ளி மாணவர்களின் நலன் கருதி ஆல் பாஸ் போட்டுக்கொடுத்தோம்.

அதிமுக அரசு அமைந்ததும் தீபாவளி தோறும் பெண்களுக்கு சேலை வழங்கப்படும். ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். ஆட்டோ ஓட்டுநர்கள் கோரிக்கையை ஏற்று, ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தில் பதிவு செய்தவர்களுக்கு ஆட்டோ வாங்குவதற்கு ரூ.75 ஆயிரம் மானியமாக கொடுக்கப்படும்.

சிறுபான்மை மக்களுக்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். ரமலானுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க 5400 மெட்ரிக் டன் அரிசி கொடுத்தோம், நாகூர் தர்காவுக்கு சந்தனக் கட்டை கொடுத்தோம், ஹஜ் புனித யாத்திரைக்கு மானியம் 12 கோடி ரூபாய் கொடுத்தோம்.

சென்னையில் ஹஜ் இல்லம் கட்ட 15கோடி ரூபாய் நிதி ஒதுக்கினோம், ஹாஜிகளுக்கு மதிப்பூதியம், உலமாக்கள், மோதினார்களுக்கு ஓய்வூதியம் அதிகரித்தோம், உலமாக்களுக்கு இருசக்கர வாகன மானியம் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தோம், வக்ஃப் வாரியத்துக்கு ஆண்டு மானியம், பள்ளிவாசல் தர்கா புனரமைப்பு நிதி வழங்கினோம், இஸ்லாமியர்களுக்கு நேரடி நியமன முறையில் நிரப்பப்படாத பணியிடங்களுக்கு முன்கொணர்வு முறையை நீடிக்க அரசாணை வெளியிட்டோம்,

டெல்டா கனமழையில் நாகூர் தர்கா குளக்கரையை சரிசெய்ய நானே நேரில் பார்வையிட்டு ரூ.4 கோடியே 25 லட்சம் ரூபாய் கொடுத்தேன். சிறுபான்மை பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைத்தோம், மறைந்த அப்துல் கலாம் நினைவாக கலை அறிவியல் கல்லூரி ராமேஸ்வரத்தில் தொடங்கினோம், திண்டுக்கல்லில் திப்பு சுல்தான் மற்றும் ஹைதர் அலி வாழ்க்கை வரலாறு மணிமண்டபம் அமைத்தோம். கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களுக்கு சென்னையில் மணிமண்டபம் அமைத்தோம், இவற்றை இந்நேரத்தில் நினைவு கூறுகிறேன்.

இதே போல கிறிஸ்தவ மக்களுக்கு, கிறிஸ்தவ பெண்கள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கினோம், தேவாலய புனரமைப்பு நிதியை 5 கோடி ரூயாக உயர்த்தி வழங்கினோம், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு 38 ஆயிரமாக நிதியுதவி உயர்த்தி வழங்கினோம், பின்னர் முழு மானியம் வழங்கப்படும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் திமுக ஆட்சிக்கு வந்து அதனைச் செய்யவில்லை. கிறிஸ்தவ அருட்சகோதரிகளுக்கு ஜெருசலம் புனிதப் பயணத்துக்கு தனி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறுபான்மை மாணவர் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் முழுமையாக வழங்கப்பட்டது. 10 ஆண்டுகளில் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த 37 லட்சத்து 16 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு ரூ.884 கோடி கல்வி உதவித் தொகை வழங்கினோம். சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் சுதந்திரமாக செயல்பட முழு ஒத்துழைப்பு வழங்கினோம்.

கிறிஸ்தவ, இஸ்லாமியப் பெருமக்களுக்கு முழு பாதுகாப்பு கொடுத்தது அதிமுக அரசு. 31 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் மத, ஜாதி சண்டை இல்லை, தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்தது.

திருச்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் பலதிட்டங்களை நிறைவேற்றினோம், திருச்சி மலைக்கோட்டை நுழைவு வாயிலை சீரமைப்பு செய்தோம், புராதன தன்மையுடன் பூங்கா 39 கோடியில் தொடங்கினோம். திருச்சி மாநகரில் 16 பூங்காக்களை உருவாக்கினோம், வெள்ள பாதிப்பைத் தடுக்க உய்யகொண்டான் கால்வாய் 18 கோடியில் சீரமைக்கப்பட்டது.

திருச்சி மாநகரில் எல்.இ.டி மின்விளக்குகள் பொருத்தப்பட்டது, சத்திரம் பேருந்து நிலையம் 28 கோடியில் மேம்படுத்தப்பட்டது. 19 கோடியில் பன்னாட்டு வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டது, 90% பணிகள் முடிந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திமுக ஆட்சியில் ஸ்டிக்கர் ஒட்டி திறக்கப்பட்டது. திருச்சியில் பழைமையான தண்ணீர் தொட்டிகள், குழாய்களை சீரமைக்க அதிமுக ஆட்சியில் டெண்டர் விடப்பட்டு, தற்போது அத்திட்டம் 2014கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது, இதுவும் அதிமுக ஆட்சியில்தான் ஆரம்பிக்கப்பட்டது.

மறைந்த தியாகராஜ பாகவதருக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டது, பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் ஆரம்பிக்கப்பட்டு 90% பணிகள் முடிவடைந்து, திமுக ஆட்சியில் ஸ்டிக்கர் ஒட்டி திறக்கப்பட்டது. மறைந்த வ.உ.சி.க்கு மணிமண்டபம் கட்டி முடிக்கப்பட்டு ஸ்டாலின் ஸ்டிக்கர் ஒட்டி திறந்தார். அதிமுக ஆட்சியில் தான் தேசத்துக்காக தன்னை அர்ப்பணித்தவர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது.

நீங்கள் கொடுத்த கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். அதிமுக போட்டியிட்டால் இரட்டை இலை சின்னத்திலும் கூட்டணி வேட்பாளர் போட்டியிட்டால் அவர்களின் சின்னத்திலும் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள். மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம். பைபை ஸ்டாலின்'' என்று முடித்தார்





## வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே ஜாப்ராபேட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்'

வேலூர், ஆக.25-

காட்பாடி அடுத்த ஜாப்ராபேட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்' ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் காலை முதல் மாலை வரை இடைவிடாது நடந்தது. இதில் பல்வேறு அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து பல்வேறு துறைகள் சார்ந்த மனுக்களை பெற்றனர். இந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமைஊராட்சி மன்ற தலைவி கனகவள்ளி நேரு தலைமை வகித்து தொடங்கி வைத்தார். இந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜாப்ராபேட்டை ஊராட்சிமன்ற தலைவி கனகவள்ளி நேரு செய்திருந்தார். இந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு மற்றும் தேநீர் விருந்து அளித்து உபசரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மின்வாரியத்தில் காலி பணியிட தரவுகளை சேகரிக்க உத்தரவு

**சென்னை, ஆக.25–**

தமிழ்நாடு மின்வாரியத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்கள் உள்ளதாகவும், அதனை உடனடியாக நிரப்ப வேண்டும் என்றும் தொழிற்சங்கத்தினர் வலியுறுத்தி வருகின்றனர்.

மின்சார வாரியமும் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மின்வாரியத்தின் ஒரு பிரிவான மின்பகிர்மான கழகத்தில் காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை குறித்த தரவுகள் கோரப்பட்டுள்ளது.

இது குறித்து அனைத்து முதன்மை மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுக்கு மின்வாரியம் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: மண்டல அளவில் குழு ஒன்றை அமைத்து அனைத்து மின்பகிர்மான வட்டம், பிரிவு மற்றும் துணை மின் நிலையங்களில் தொடக்க நிலை பணிகளில் முக்கியமான தேவை உள்ள காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை குறித்த தரவுகளை சேகரித்து அறிக்கை தயாரிக்க வேண்டும். வரும் செப்டம்பர் முதல் வாரத்துக்குள் இறுதி அறிக்கையை தயார் செய்து, இதுதொடர்பாக நடக்கவுள்ள ஆலோசனை கூட்டத்தில் சமர்பிக்க தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



## ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு அமைப்பின் சோதனை வெற்றி: ராஜ்நாத் சிங் பாராட்டு

புதுடெல்லி, ஆக.25-

ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு ஆயுத அமைப்பின் முதல் விமான சோதனைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு ஆயுத அமைப்பின் (IADWS) முதல் விமான சோதனைகள் ஒடிசா கடற்கரையில் இன்று 12.30am அளவில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

இந்த ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு ஆயுத அமைப்பு என்பது ஒரு உள்நாட்டு தயாரிப்பு. மிக குறுகிய தூரத்துக்குள் அதிவிரைவாகச் சென்று எதிரியின் ஏவுகணைகள் மற்றும் உயர்சக்தி லேசர் ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை தாக்கி அழிக்கவல்ல பல அடுக்கு வான் பாதுகாப்பு அமைப்பாகும்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

DRDOவின் வெற்றிகரமான இந்த சோதனை முயற்சிக்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "வான் பாதுகாப்பு ஆயுத அமைப்பின் முதல் விமான சோதனையை டிஆர்டிஓ ஒடிசா கடற்கரையில் இருந்து நேற்று வெற்றிகரமாக நடத்தியது.

IADWS-ன் வெற்றிக்காக பாடுபட்ட டிஆர்டிஓ, இந்திய ஆயுதப் படைகள் மற்றும் தொழில்துறைக்கு வாழ்த்துகள். இந்த தனித்துவமான விமான சோதனை நமது நாட்டுக்கு பல அடுக்கு வான் பாதுகாப்பு திறனை நிறுவியுள்ளது. எதிரியின் வான்வழி அச்சுறுத்தல்களுக்கு எதிரான நமது பாதுகாப்பை இது வலுப்படுத்தப்போகிறது.'' என தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் இன்று முதல் 28ம் தேதி வரை வழக்கத்தை விட 5 டிகிரி வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு

**சென்னை, ஆக.25–**

தமிழகத்தில் இன்று முதல் 28ம் தேதி வரை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒடிசா - மேற்கு வங்கம் இடையே கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். மேற்கு திசை காற்றில் வேகமாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று (ஆக.25) முதல் ஆக.30ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




தமிழகத்தில் நாளை ஓரிரு இடங்களிலும், 26 முதல் 28-ம் தேதி வரை ஒருசில இடங்களிலும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக் கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் 5 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தலா 4 செமீ, விருதுநகர், மதுரை மாவட்டம் சாத்தியார், கல்லந்திரி, சிட்டம்பட்டி, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் தலா 3 செமீ, சிவங்கை மாவட்டம் தேவகோட்டை, ராமநாதபுரம் மாவட்டம் தீர்த்தாண்டதானம், மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் சந்தை, புதுக்கோட்டை மாவட்டம் மிமிசல், ஆயிங்குடி, நீலகிரி மாவட்டம் மேல் கூடலூரில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நல்லகண்ணுவின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வெங்கடேஸ்வரா மருத்துவமனை அறிக்கை

சென்னை, ஆக.25-

இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வெங்கடேஸ்வரா மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது. தலையில் ஏற்பட்ட காயத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், வயது மூப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள மற்ற பிரச்னைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை நிர்வாகம் கூறியுள்ளது.



Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161